17th July 1964]

சேலத்தில் மருத்துவக் கல்லூரி.

*519 கேள்வி—திரு. வி. ஆர். பெரியண்ணன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) ரயில்வே செஸ் நிதியைக் கொண்டு சேலத்தில் மருத்துவக் கல்லூரி அமைப்பது பற்றி ஏதேனும் கோரிக்கைகள் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆம்.

(இ) சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியை வெளி யூரில் தகுந்த இடத்திற்கு மாற்றும் திட்டத்தோடு இக் கோரிக்கை களை அரசாங்கம் ஆராய்ந்தது. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியை அமைப்பதெனக் கடைசியாக முடிவு செய்யப்பட்டது. மூன்றுவது திட்டக் காலத்தில் புதியதாக அரசாங்க மருத்துவக் கல்லூரி எதை யும் திறக்கும் திட்டம் இல்லை.

திரு. எம். வி. கரிவேங்கடம்: சேலத்தில் மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்துவதாக இருந்தார்கள். அதைத் திருநெல்வேலிக்கு மாற்ற வேண்டிய அவசியம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அந்த யோசனை ரொம்ப நாளைக்கு முன்னே பரிசீலிக்கப்பட்டுக் கைவிடப்பட்டு விட்டது. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முக்கியக் காரணம் சரியான தண்ணீர் வசதி இல்லாததுதான். ஆகவேதான் திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டது.

திரு. ப. கமலநாதன்: தலைவர் அவர்களே, இந்த ரயில்வே செஸ் நிதியை சேலத்திற்கு ஒதுக்கின நேரத்தில் அந்த நிதியைக் கொண்டு சிறிய சிறிய கட்டடங்களைக் கட்டிக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. ஆனல் வட, தென் சேல அபிவிருத்தி மாவட் டங்களில் அந்த நிதியைக் கொண்டு மருத்துவக் கல்லூரி அங்கே ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டும், அந்த நிதியைக் கொண்டு இந்தச் சிறிய திட்டங்களை நிறைவேற்றலாம் என்றால் அரசாங்கத் திடமிருந்து தங்களுக்கு எவ்விதத் தாக்கீதும் இதுபற்றி வரவில்லை என்று கலெக்டர் கூறுகிறார். ஆகவே உடனடியாக மருத்துவக் கல்லூரி சேலத்தில் ஏற்படுத்தப் போவதில்லையாதலால் அந்த ரயில்வே செஸ் நிதியை முன்பு சொன்னது போலச் சிறு சிறு கட்டிடங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று உத்தரவிடுவார்களா ? இப்படி உத்தரவிடுவதனல் வீணுக முடங்கிக் கிடக்கும் 25 லட்சம் ரூபாயை பல வேலைகளுக்குப் பயன் படுத்த முடியும்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை. ஆனலும் கனம் அங்கத்தினர் கூறியதை மனதில் வைத்து ஆவன செய்கிறேன்.